அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI

Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



அ.எண் : 23 / 2018
தேதி : 09.02.2018

## ஆவடி ராணுவ சீருடைத் தொழிற்சாலையை மூடும் முடிவை மத்திய அரசு கைவிட வேண்டும்.

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ரா.சரத்குமார் வலியுறுத்தல்.

மத்திய அரசின் பாதுகாப்புத்துறை எடுத்திருக்கும் கொள்கை முடிவுகளால், தமிழகத்தில் உள்ள ஆவடியில் ராணுவ படையினருக்கான உடை தயாரிக்கும் தொழிற்சாலை மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

1961-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இத்தொழிற்சாலையில் தற்போது 811 பெண்கள் உட்பட, 2121 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

1960-ஆம் ஆண்டில் இந்திய - சீன எல்லை தகராறில் இந்திய ராணுவம், எல்லை பகுதிகளில் நிலவிய தட்ப வெப்ப நிலைக்கு ஏற்ற சீருடைகள் வழங்கப்படாததால், பின்வாங்க நேரிட்டது என்ற காரணத்தால், அமைக்கப்பட்ட தளவாடப் பொருட்கள் மற்றும் சீருடைத் தொழிற்சாலைகளில் ஆவடி ராணுவ உடைத் தொழிற்சாலையும் ஒன்று.

இந்தியாவின் முப்படை வீரர்களின் தேவைக்கேற்ற ராணுவ சின்னம் பொறிக்கப்பட்ட சீருடைகள், கூடாரங்கள், பாராசூட்கள் போன்றவற்றை, ஆண்டுக்கு சுமார் 400 கோடி ரூபாய் மதிப்பில் இத்தொழிற்சாலை தயாரித்து வருகிறது. மேலும் மத்திய ரிசர்வ் படைக்கும் தேவையான சீருடைகளையும், கஜகஸ்தான், ஐ.நா.சபை ராணுவ வீரர்கள் என வெளிநாடுகளுக்கும் சீருடைகள் தயாரித்துத் தந்திருக்கிறது.

இந்நிலையில் மத்திய அரசின் பாதுகாப்புத்துறை அமைச்சகம், இத்தொழிற்சாலையை மூட நினைப்பது கண்டிக்கத்தக்கது ஆகும்.

..2

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி

ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



ராணுவ வீரர்களுக்கு சீருடைகளைப் பதிலாக ஆண்டுக்கு 10 ஆயிரம் ரூபாய் சீருடைப் படியாக வழங்கப்படும் என்றாலும், இத்தொழிற்சாலையில் நேரடியாகப் பணிபுரியும் 2121 தொழிலாளர்கள் மற்றும் மறைமுகமாகப் பயனடையும் ஆயிரக்கணக்கானவர்களின் அடிப்படை வாழ்வாதாரம் கேள்விக்குறியாகிவிடும் என்பதை மத்திய அரசு நினைவில் கொள்ளவேண்டும். ராணுவ வீரர்களுக்கு சீருடைகளை தைத்து கொடுக்கும் பணியை மதிப்பகவும், கௌரவமாகவும் நினைத்து பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அரசு ஏமாற்றம் அளிக்கக்கூடாது.

லட்சக்கணக்கில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவோம் என்று மத்திய அரசு தொடர்ந்து அறிவித்து விட்டு, மறுபுறம் இப்படி ஆயிரக்கணக்கில் வேலை வாய்ப்புகளை பறிக்க நினைப்பது கண்டனத்திற்குரிய செயலாகும்.

எனவே, ஆவடி ராணுவ சீருடை தயாரிக்கும் தொழிற்சாலையை மூடும் முடிவை கைவிடவேண்டும் என்று அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ரா.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com